egistered No. M. 2830 "SIDDHANTHAM"
Vol 43 — No. 10

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

ளர் 43 | சாதாரண ஐப்பசி 1970 அக்டோபர் | இதழ் 10

உள்ளுறை

	பக்கம்
சக்தி தோத்திரங்கள்	283
திருக்குரக்குக்கா	296
நல்லபிள்ளை நானே	298
"ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே"	304
கருணையந்தாதி	308

இதழாசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ.,
துணையிதழாசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாஜச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு.

இராயப் பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில் 25–10–70 ஞாயிறு காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக் கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவு செலவுக் கணக்கு, ஆண்டுவிழா, ஆங்கில சித்தாந்தா, சமாஜத் தேர்வுகள் முதலியன பற்றி ஆலோசிக்கப்பெறும். செயற் குழு உறுப்பினர்கள் எல்லாரும் அவசியம் வருமாறு கேட்டுக்கொள்ளப் பெறுகின்றனர். (செயலாளர்)

திரு. இரா. சுப்பிரமணியம் அவர்களும் (ஆசிரியர், திரு. வி. க. இல்லம், காமாட்சியம்மன் கோயில்தெரு, புன்செய்ப் புளியம்பட்டி அஞ்சல், கோவை மாவட்டம்) திரு. நா. த. அருணாசலம் அவர்களும் (மாரியம்மன் கோவில் தெரு, புன்செய்ப்புளியம்பட்டி அஞ்சல், கோபி வட்டம், கோவை மாவட்டம்.) நம் சமாஜ ஆயுள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நம் சைவசித்தாந்த மகாசமாஜ 65–ஆம் மாநாடு திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெற வேண்டி எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன். பிற விவரங் கள் அடுத்த இதழில் வெளிவரும்.

திரிசிரபுரச் சைவ சித்தாந்த சபையில் 9—8—1970 ல் "சுந்தரமூர்த்தி" சுவாமிகள் திருநாள் விமரிசையாகக் கொண்டாடப் பெற்றது ஈரோடு திரு. அ. ஞானசம் பந்த முதலியார் அவர்கள் "சுந்தரர்" என்ற தலைப்பில் விரிவுரையாற்றினார்கள்.

நம் சமாஜ ஆயுள் உறுப்பினர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்களுக்கு 10—9—70 அன்று தருமபுரம் மகாசந்நி தானம் அவர்கள் "செந்தமிழ் இலக்கியச் செம்மல்" என்னும் பட்டத்தை வழங்கியதோடு பொன்னாடையும் போர்த்திச் சிறப்பித்தார்கள் என்பதறிந்து சமாஜத்தினர் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியுடன் நாடு.

மலர் 43	சாதாரண ஞூ ஐப்பசி அக்டோபர் 1970	இதழ் 10

உ

சக்தி தோத்திரங்கள்

(ஆசிரியர்)

தமிழில் மிகப் பழைய காலம் முதலாகத் தனியான சத்தி வழிபாடும் இருந்து வந்தது. பாலை நிலத்திற்குத் தெய்வம் கொற்றவை என்று பொருளிலக்கணம் வகுத்த காலத்தே, சக்தி வழிபாடுதான் இங்குக் கருதிச் சொல்லப் பட்டது. 'சிலப்பதிகாரத்தில் குன்றக் குரவை என்ற காதையில் உள்ள' 'ஆனைத்தோல் போர்த்து' என்பது முதலான வரிப்பாடல்கள் சக்தி துதியாக அமைந்தவை:

ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்துக்
கானத் தெருமை கருந்தலைமேல் நின்ருயால்
வானேர் வணங்க மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றியே நிற்பாய்!

திருமந்திரத்தில் நாலாந் தந்திரத்துள் பெரும் பகுதி சக்தியின் சிறப்பைக் கூறுவதாயிருப்பதும் அறியத்தக்கது. திருவெம்பாவையில் மாணிக்க வாசகர் பாடியுள்ள பின் வரும் பாடல் சிவபெருமான் சக்தியாக இருந்து அருள் புரியும் நிலையைத் தனியே குறித்துத் துதிப்பதாகும்.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதைக் குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருள் ஆ மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதித் திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

இப்பாடல்களையன்றி, வேறு தனியே சக்தி தோத்திரமாக எந்தப் பண்டை நூலும் இல்லை. ஒன்பதாம் திருமுறையிலும் பதினோராம் திருமுறையிலும் முருகன் துதிகளும், விநாயகர் துதிகளும் காணப்படினும், சக்தி துதியாகத் தனிப் பிரபந்தங்கள் காணப்படவில்லை. பிற்காலத்தில் அம்பிகை தோத்திரமாக மிகப் பலவான நூல்கள் எழுந்திருக்கின்றன.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் இரண்டாம் குலோத்துங்க சோழனுக்குப் பிள்ளைத் தமிழ் பாடிய ஒட்டக்கூத்தர், அங்குக் காப்புப் பருவத்தில் காளிக்கும் சத்த மாதருக்கும் தனியான வணக்கம் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து சக்திக்குத் தனியாக வணக்கஞ் சொல்லுகின்ற மரபு புராணத்துள் எழலாயிற்று. சித்தாந்த சாத்திரமான சிவஞான சித்தியாரிலும், தனியான சத்தி வணக்கப் பாடல்கள் காணப்படுகின்றன. இன்னும் பிற்காலத்தில் குமர குருபர சுவாமிகள், சிவப்பிரகாச சுவாமிகள், தாயுமானவர், சிதம்பர சுவாமிகள் போன்றார் பிள்ளைத் தமிழ், இரட்டை மணிமாலை, பதிகம், கலிவெண்பா முதலான தனிப் பிரபந்தங்களைப்பாடி இருக்கிறார்கள். இவ்வாறு எழுந்த பிரபந்தங்கள் கணக்கில்லாதன.

எனினும், சிறப்பான தேவி தோத்திரப் பிரபந்தங்கள் பதினாறும் நூற்றாண்டு தொடங்கியே எழுந்திருக்கின்றன. இந்த நூற்றாண்டில பாண்டி நாட்டில் வீரசோழன் என்ற

ஊரில் கவிராச பண்டிதர் என்ற பெரும் புலவர் ஒருவர் இருந்தார். இவர் வடமொழியில் ஆதி சங்கரர் செய்த சௌந்தரிய லகரி என்ற நூலைத் தமிழில் நூற்றுக்கு மேற்பட்ட விருத்தப் பாக்களால் மொழி பெயர்த்தார். இந்த நூல் தோன்றிய காலம் பதினாறும் நூற்றாண்டின் இடைப் பகுதி. இதன் பின்னர் தமிழில் மிகப் பலவான நூல்கள் அம்பிகை தோத்திரமாகப் பாடப்பெற்றிருக்கின்றன. அவற்றைப் பின்வருமாறு ஓர் அட்டவணைப் படுத்திக் காட்டலாம்.

எண்.	நூல்	ஆசிரியர்	பாடல் தொகை	காலம்
1.	சௌந்தரிய லகரி (ஆனந்தலகரி)	வீரை-கவிராச பண்டிதர்	110	16 நூ.
2.	ஆனந்த மாலை	,,	31	,, ,,
3.	வராகி மாலை	?	32-க்கு மேல்	,, ,,
4.	சத்தி கவசம்	அதிவீரராம பாண்டியர்	12	,, ,,
5.	அம்பிகை மாலை	குலசேகர பாண்டியர்	32	16 நூ.
6.	அபிராமி அந்தாதி	அபிராமிபட்டர்	102	18 நூ.
7.	அபிராமியம்மைபதிகம்	,,	20	,, ,,
8.	கலை ஞான தீபம்	கவிராச சுந்தரன்	100	18 நூ.
9.	சவுந்தரி அந்தாதி	பவளக் கொடி அடிகள்	100	18 நூ.

இந்த நூல்களே சிறப்பான தனிச் சத்தி தோத்திர நூல்களாயிருப்பன. இவற்றின் இயல்புகளைப் பின்னே விளக்கிச் சொல்கிறோம். இவற்றுள் அபிராமி அந்தாதி ஒன்றே பிரசித்தமாய் வழங்குவது. வராகி மாலை பொதுவாக மந்திரவாதிகள் செபித்துச் சத்தி பெற்றிருப்பதாகச் சொல்லுவார்கள். ஏனைய நூல்களை அறிந்தோர் இலர்.

19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுந்த காமாட்சி யம்மை தோத்திரம், வடிவுடையம்மை தோத்திரம் என்பன போல, சாமானிய நடையிலமைந்த பதிகங்களை இங்குக் கருதவில்லை.

சௌந்தரியலகரி

இப்பெயர் கொண்ட நூல் வடமொழியில் ஆதிசங்கரர் நூறு சுலோகங்களாகப் பாடியது. இத்தொடரின் பொருள் "அழகின் பெருக்கு" என்பதாகும். அத்வைத நிருபணம் செய்த சங்கரர் பிற்காலத்தில் உருவ வழி பாட்டின் அவசியத்தை உணர்ந்து பாடிய பல தோத்திர நூல்களில் இதுவும் ஒன்று. இவர் குழந்தையாக இருந்து சத்தியின் திருவுருவ அழகின் வெள்ளத்திலேயே தோய்ந்து பாடுகின்றார். இந்நூலை வீரை-கவிராச பண்டிதர் என்பவர் சுமார் கி. பி. 1550 இல் தமிழில் விருத்த யாப்பால் மொழிபெயர்த்தார். இது இரு பாகங்களாகி, முதல் பாகம் பாயிரம் ஆறு பாடல்களும் நூல் 40 பாடல்களும் கொண்டது. பிற்பகுதி 64 பாடல்கள் கொண்டது முற் பகுதி ஆனந்தலகரி என்றும், பிற்பகுதி சௌந்தரியலகரி என்றும் தமிழில் பெயர் வழங்கும். சென்ற நூற்றாண் டின் தொடக்கத்தில் இந்நூலை அச்சிட்டோர் சௌந்தரிய லகரி என்ற ஒரு நூலாகவே இதைத் தமிழில் அச்சிட் டார்கள். தமிழ் நூல் இனிய செய்யுள் நடையில் அமைந் தது. இனிமையான சந்தச் சுவையும் பொருந்தியது. படிக்கப் படிக்க மனத்தை அம்பிகையின் திருவடியினி டத்து ஈர்த்துச் செல்வது; பாயிரப் பகுதியில் பண்டிதர் தமக்குப் பிரமாதிராயர் என்பவர் மொழிபெயர்க்கத் துணை செய்தார் என்று கூறுகிறார். நூலின் தொடக்கத்திலும் இறுதிப்பாடலிலும் ஆசிரியர் தமது பெயரைக் குறிப்பிடு கின்றார்.

முதற்பாகம் முழுமையும் தேவியின் பெருமையையும், அருளையும், அவள் இயல்பையும், அவளைத் தியானிக்க வேண்டிய முறைகளையும், ஆறுதாரத்துள் அவள் காட்சி கொடுக்கும் தன்மையினையும் விரித்துரைப்பது. சௌந் தரிய லகரி என்ற பெயருக்கு ஏற்ப, விநாயகர் வணக்கத்

தில் தேவியை இவர் அபிராமி என்றே கூறுவது குறிப் பிடத்தக்கது. இரண்டாம் பாகத்தில் தேவியை 60 பாடல் களிலும் கேசாதிபாதமாகத் துதித்து, பல சுருதியோடு முடிக்கிறார். இவருடைய பாடல் சிறப்புக்கு எடுத்துக் காட்டாக ஒரு பாட்டை இங்குக் காட்டலாம். இதில் மதுரகவி பாட வேண்டினோர் அம்பிகையை எவ்வாறு தியானிக்க வேண்டும் என்பதை அறிவுறுத்துகிறார் :

உனதுசரற் காலமதி யனைய மெய்யும்,
 உடல்குழைத்த பிறைச்சடையும் கரங்கள்நான்கும்,
அனவரத முனும்அபய வரத ஞான
 அருட்பளிங்கு வடமொடுபுத் தகமு மாக,
நினைகிலர்முன் வழுத்திலர்பின் வணங்கார், எங்ஙன்
 நிறைந்தபசுந் தேனும்அரும் பாலும் தூய
கனியுமென மதுரம்விளைந் தொழுகு பாடற்
 கவிதைபொழி வது?கயிலைக் கடவுள் வாழ்வே.

வசியம், மோகனம் முதலிய பொருள்களும் இதனுள் சொல்லப்பட்டுள்ளன என்பர். ஓரளவு சாக்த சமயத் தத்துவங்கள் இதனுள் காணப்படும். இந்நூலின் பாடல் கள் எண்சீர் விருத்தங்கள், எழுசீர், அறுசீர் விருத்தங் கள், கலிவிருத்தம், கொச்சகக் கலிப்பா முதலிய பலவகை யாப்பினால் அமைந்தவை.

பண்டிதர் மொழி பெயர்ப்பில் மூலத்தின் கருத்தை மனத்தில் வாங்கிப் புதிதாகப் பாடியிருக்கிறார். ஆகவே சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பாக இவர் நூலைக் கருத முடியாது. தமிழ் மரபுக்குரிய நயங்கள் பலவும் இவர் பாடல்களில் காணப்படும்.

பதினாறும் நூற்றாண்டின் பிற்பகுதியில் பல புராணங் களும் பிரபந்தங்களும் பாடிப் புகழ்பெற்றிருந்த சைவ-எல் லப்ப நாவலர் இந்நூலுக்குச் சிறப்பான உரை எழுதியிருக் கிறார்.

ஆனந்த மாலை

இந்த நூலும் சௌந்தரிய லகரி பாடிய கவிராச பண் டிதரே பாடியதாகப் பிரதிகளில் காணப்படுகிறது. பின் வரும் பாடல் ஆசிரியர் பெயரைக் குறிப்பிடும்,

கானம் பயிலாரக் கவிராச பண்டிதன்சொல்
ஆனந்த மாலைபடித்து ஆனந்த வாழ்வறிவார்
வானம் புடைசூழ்ந்த வாரிநில மேழுலகும்
ஞானம் பரமகுரு நாதரிடத் தெய்துவரே.

இந்நூல் 30 பாடல்களை; கொச்சகக் கலிப்பா; பாடல் ஒவ்வொன்றும் "ஆனந்த நாயகமே" என்று முடிவது. நூல் இறுதியில் 30 பாடல்களுக்கும் அடிவரவு கூறும் ஒரு தனிப்பாடல் உள்ளது. இந்நூல் முழுமையும் தோத்திரப் பாடல்களாக உள்ளது.

நீதித் தனிக்கடலே நீவகுத்த பல்லுயிரைப்
பேதித் தறுசமயப் பித்தேற்ற வேண்டிற்றோ?
சோதிக் கடவுளர்க்கும் தொல்மறைக்கும் எட்டாத
ஆதித் தனிப்பொருளே, ஆனந்த நாயகமே.

இந்நூல் குஜிலிப் பதிப்பாக மட்டும் பலமுறை அச்சாகி வெளிவந்துள்ளது. நல்ல பதிப்பு இன்னும் வெளி வரவில்லை.

வராகி மாலை

சத்தமாதரில் ஒருத்தியும் தேவியின் அம்சமும் ஆகிய வராகியைத் துதிக்கின்ற பழைய சிறு நூல். இதையும் கவிராச பண்டிதரே செய்தார் என்றும் சொல்வர். அது பொருந்தாது. இந்நூல் முப்பத்திரண்டு கட்டளைக் கலித் துறைப் பாடல்கள் கொண்டதாக அச்சிடப்பட்டுள்ளது. ஏட்டுப்பிரதியில் பின்னும் பல பாடல்கள் காணப்படுகின் றன. இவற்றை வசியம் முதலான அட்ட கருமங்களுக் குரிய மந்திரங்களாக அனேகர் மனப்பாடஞ் செய்து உச்சரிக்கும் பழக்கமுடையவர்களாக இருக்கிறார்கள். அட்டகருமங்களாவன:—வசியம், ஆகருஷணம், மோகனம், உச்சாடனம், தம்பனம், வித்துவேஷணம், பேதனம், மாரணம்.

இவை ஒவ்வொன்றுக்கும் பல பாடல்கள் இங்கு உள்ளன. பாடல்கள் நல்ல நடையில் அமைந்துள்ளன; எனினும், பகைவரை வீழ்த்துவதே நோக்கமாய்க் கொண்

டவை. சத்ருரு மாரணம் என்ற தலைப்பில் வரும் பின் வரும் பாடலைக் காண்க.

ஆராகிலும்நமக் கேவினை செய்யின் அவருடலம்
கூராகும் வாளிக் கிரையிடு வாள்கொன்றை வேணியரன்
சீரார் மகுடத் தடியிணைசேர்க்குந் திரிபுரையாள்
வாராகிவந்து குடியிருந் தாள்என்னை வாழ்விக்கவே.

பாடல்கள் பலவற்றில் வராகி என்ற பெயர் பயில் கின்றது. பல பாடல்களில் 'வராகி குலதெய்வமே' என்ற முடிபையும் காணலாம். அபிராமி என்ற பெயரும் பாடல் களில் காணப்படுகிறது.

சிறப்பான இலக்கியம் பாடிய கவிராச பண்டிதர் வசிய மந்திரம் ஒத்த இந்நூற் பாடல்களைப் பாடினர் என் பது ஏற்க ஒண்ணாதது.

இந்த நூலை அபிராமி பட்டரே செய்தார் என்று வேறு சிலர் சொல்லுவார்கள். அதற்கான வரலாறு பின் வருவது. பட்டர் வாம மார்க்கத்தவர்; அதாவது வங்கா ளத்தில் சாக்த சமயத்தைப் பின்பற்றுபவர்கள் போல, மது, மாமிசம், மச்சம், முத்திரை, மைதுனம் ஆகிய பஞ்ச மகாரங்களைக் கொண்டவர் என்பர். அவர் ஆற்றின் நடுவிலிருந்து சக்தி உபாசனை செய்து வந்தார். இரவு நேரத்தில் நீரின் நடுவில் இருந்த இவர் மடியில் வரால் மீன்கள் துள்ளிவந்து விழும். மீன்களோடு இவர் இல்லத் துக்கு வருவார். ஒரு சமயம் இவர் இவ்வாறு வந்தபோது, இவரிடம் அழுக்காறு கொண்டிருந்தோர் இவரைக் கையும் களவுமாகப் பிடித்து மீன்களோடு அரசன் முன் நிறுத்தி னர். அரசன் இவரைச் சோதிக்க முற்பட்டபோது, இவர் தம் உத்தரியத்தை உதறினர். இவருடைய சக்தி உபா சனையின் வன்மையால் அப்போது அதிலிருந்து உதிர்ந் தனவே வராகிமாலைப் பாடல்கள். விரோதிகளை வெல்ல வேண்டுமாதலால், இப்பாடல்கள் வசியம் முதலான கருமங்களைக் குறித்த பாடல்கள் ஆயின என்பது கதை; இது உண்மையன்று; பொய்க்கதையே.

இந்தப் பொய்க்கதைக்கு ஆதரவு தருவது போல இந் நூலில் உள்ள பின்வரும் பாடலும் குறிப்பிடத்தக்கது.

மதுமா மிசந்தனைத் தின்பா னிவளென்ற மாமறையோர்
அதுவே யுதாசினம் செய்திடுவாரந்த அற்பர்களின்
கதிர்வா யடைத்திட உள்ளங் கலங்கக் கடித்தடித்து
விதிர்வாளில் வெட்டி யெறிவாள் வராகியென்
மெய்த்தெய்வமே.

இந்நூல் பட்டர் செய்ததன்று; ஆயினும் நூலில் சுவையான பாடல்களும், உச்சரிப்போருக்கு மனோ தைரியம் ஊட்டத் தக்க பாடல்களும் உள்ளன. பின்வருவது எடுத்துக்காட்டான ஒரு பாடல்.

வீற்றிருப் பாள் நவகோணத்தி லே; நம்மை வேண்டுமென்று
காத்திருப்பாள்; கலி வந்தணு காமல்என் கண்கலக்கம்
பார்த்திருப் பாளல்லள்; எங்கேயென் றங்குச
பாசங்கையில்
கோத்திருப் பாள்; இவ ளேஎன்னை யாளுங் குலதெய்வமே.

சத்தி கவசம்

நெடுங்காலமாக, விநாயகரகவல் முதலான சில சிறு துதிப் பிரபந்தங்கள் ஒரு தொகுப்பாக வழங்கி வருகின்றன. அவை கந்தர் கலிவெண்பா, சிவகவசம், சத்திகவசம், இலக்குமி தோத்திரம் முதலாயின. அவற்றுள் சத்தி கவசமொன்றும் இங்குக் கருதத்தக்கது. சத்தி கவசம் என்ற பெயரால் வழங்குவது, அதிவீரராம பாண்டியர் பாடிய காசிகாண்டத்துள எழுபத்திரண்டாம் அத்தியாயத்தின் தொடக்கப்பகுதி 12 பாடல்கள். இது துர்க்கன் என்ற அசுரனது எருமைக்கடா வடிவையழித்து அவனைத் தேவியார் கொன்றபோது, முகுந்தன் முதலான அமரர்கள் பாடித்துதித்தது. உடலின் ஒவ்வொரு பாகத்தையும் அம்பிகையின் ஒவ்வொரு கூறு காப்பதாக என்று கூறித் துதிப்பது:

அங்கையிற் கரகந்தாங்கும் பிரமாணி அருளினோடும்
துங்கமென் சென்னிகாக்க; வயிணவி துகளிலாகம்
எங்கணும் காக்க; செய்ய ஏந்தெழில் உருத்திராணி
தங்குமென் திசையும் அன்பு தழைத்திட இனிதுகாக்க.

என்பது முதல்பாட்டு. இதுபோல 12 பாடல்களிலும்
52 சத்திகள் சொல்லப்பட்டுள்ளனர். இப்பாடல்கள்

மிகப் பெரிதாகிய புராணத்தில் ஒரு பகுதி என்பது நினைவி லிருக்கத்தக்கது. இதுபோல, சிவன், விநாயகர், முருகனுக் குக் கவச நூல்கள் உள்ளன. சத்தி கவச ஆசிரியர் அதி வீரராம பாண்டியர் காலம் கி. பி. 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி.

அம்பிகை மாலை

மதுரை மீனாட்சியம்மையை 'மதுராபுரி யம்பிகையே' என்று சொல்லித் துதிக்கின்ற 32 கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் கொண்டது. செய்தவர் குலசேகர பாண்டி யன் என்று சிறு துதிப்பாடல் கூறும்.

> பிடித்தாரக்கட்டி யணைத்தமு தூட்டிய பேயின்முலை
> குடித்தாடு மாயன் குலசேகரன்வட குன்றைச்சென்டா
> லடித்தான் படித்த சொல்அம்பிகை மாலைஐயாறுகவி
> படித்தார்கள் கற்பகக் காவும்பொன் நாடும் படைப்பவரே.

குலசேகர பாண்டியன் என்ற பெயர் 16 ஆம் நூற் றாண்டின் இடைப் பகுதியில் தென்காசியில் இருந்து ஆட்சி புரிந்த அதிவீரராமனும், அவன் தமையன் புதல்வர் களான வரகுண ராமனும், வரதுங்க ராமனும் தரித்துக் கொண்ட பொதுவான பட்டப்பெயராகும். இப்பெயர் இவ்விடத்தில் பிரமோத்தர காண்டத்தைத் தமிழில் பாடிய வரதுங்க ராமனுக்கு உரியது என்று கருதலாம். இவன் பட்டமேற்றது கி, பி. 1588. ஆகவே அம்பிகை மாலையின் காலம் 16 ஆம் நூற்றாண்டின் இறுதியாகும்.

அம்பிகை மாலையைக் குறித்த ஒரு விரிவான ஆராய்ச் சிக்குறிப்பு 1966 அக்டோபர் சித்தாந்தம் இதழில் எழுதி யிருக்கிறோம். இச் சிறு நூல் தென் பாண்டி நாட்டில் கல்வி பயில்வோர் முதலில் மனப்பாடஞ் செய்தற்குரிய நூலாயிருந்து வருகிறது. பாடல்கள் மிக்க எளிமையும் இனிமையும் உடையன. அபிராமி பட்டர் இந்த நூலைப் பயின்றே தம் அந்தாதி பாடினார் என்பது அங்கு விளக்கிக் காட்டப்பட்டது. பின் வருவது இந்நூற் சிறப்புக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இணங்கேன் ஒருவரை நின்னிரு தாளன்றி யெப்பொழுதும்
வணங்கேனொரு வரை வாழ்த்துகி லேன்வஞ்ச
நெஞ்சருடன்
பிணங்கேன் அமுதம் பெருகுஞ்செம் பாதிப் பிறைமுடித்த
அணங்கே சரணங்கண் டாய்மது ராபுரி யம்பிகையே.

அபிராமி அந்தாதி

தேவி தோத்திரங்களில் நன்றாகத் தெரிந்ததும் அதிகம் பயிலப்படுவதும் இந்த நூலாகும்; செய்தவர் திருக்கடவூரில் வாழ்ந்த அபிராமிபட்டர். இவர் தேவி உபாசனையில் ஈடுபட்டு உலக இயல்புகளைக் கடந்தவராயிருந்தார். இவர்மீது பொறாமை கொண்டிருந்த ஏனைய அந்தணர் இவர் வாம மார்க்கத்தைத் தழுவியவரென்றும், பஞ்ச மகாரங்கள் உடையவரென்றும், அரசனிடம் அவதூறு கூறினர். அரசனும் அவ்விதமே அவ்வந்தணரின் கூற்றை நம்பி இவரைச் சோதிக்க வந்து, 'இன்று என்ன திதி' என்று ஒரு நாள் வினவினன். அம்பிகையின் அருளொளி வடிவிலே எந்த நேரமும் உள்ளத்தை லயிக்கவிட்டிருந்த பட்டர் தாம் கண்டுவரும் பேரொளி அனுபவத்தால், அன்று அமாவாசையாயிருக்கவும், பௌர்ணமி என்றார். சந்திரனைக் காட்டுமாறு அரசன் கூற, இவர் அன்று அமாவாசை யென்பதைப் பின்னரே யுணர்ந்து அம்பிகை மீது அபிராமி அந்தாதி பாடி அம்பிகை செவியிலுள்ள தோட்டின் ஒளியை அரசன் காணச் செய்து பௌர்ணமி என்ற சொல்லை மெய்ப்பித்தார் என்பது வழங்கிவரும் வரலாறு. நூலில் வாமமார்க்கத்துக்குரிய செய்திகள் எவையும் இல்லை. நூல் தோன்றிய நாளாக சைவ மக்கள் பல்லாயிரக் கணக்கில் பாராயணம் செய்து அம்பிகையின் அருளைப் பெற்று வருவது கண்கூடு. இன்றும் இதை முறையாகப் பாராயணம் செய்பவர்கள் வேண்டியவற்றை எல்லாம் பெறுகிறார்கள். நூல் எளிய நடையில் நல்ல தமிழில் இயன்றுள்ளது. பட்டர் இலக்கிய இலக்கணங்களில் நன்கு தோய்ந்தவர். குலசேகர பாண்டியனார் செய்த அம்பிகை மாலையை நன்கு பயின்றவர் என்பது தெரிகிறது. பின்வரும் பாடல்கள் இதன் சுவைக்கு எடுத்துக் காட்டாகும்.

தனம் தரும், கல்வி தரும், ஒரு நாளும் தளர்வறியா
மனம் தரும், தெய்வ வடிவும் தரும், நெஞ்சில் வஞ்சமில்லா
இனம் தரும், நல்லன எல்லாம் தரும்; அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக் கண்களே.

நன்றே வருகினும், தீதே விளைகினும், நான் அறிவது
ஒன்றேயும் இல்லை; உனக்கே பரம், எனக்குள்ள எல்லாம்
அன்றே உனதென் றளித்து விட்டேன்; அழியாத குணக்
குன்றே! அருட் கடலே! இமவான் பெற்ற கோமளமே!

அபிராமியம்மை பதிகம்

அபிராமி அந்தாதி பாடிய பட்டர் பாடியனவாகச் சில பதிகங்கள் வழங்குகின்றன. அவை விநாயகர் பதிகம், அமுதகடேசுவரர் பதிகம், காலசம்மார மூர்த்தி பதிகம், அபிராமியம்மை பதிகம் காலசம்மார மூர்த்தி பின்முடுகு வெண்பா என்பன. இவையாவும் திருக்கடவூர் தலத்துக்குரியவை. இவற்றுள் அபிராமியம்மை பதிகம் இரண்டு. ஒவ்வொன்றும் 14 சீர் ஆசிரிய விருத்தம் பத்துக்கொண்டது. பின்வரும் பாடல் இக்காலத்தில் பலரும் நன்கறிந்த பாடல்:

கலையாத கல்வியும், குறையாத வயதும், ஓர்
    கபடு வாராத நட்பும்,
கன்றாத வளமையும், குன்றாத இளமையும்,
    கழுபிணி இலாத உடலும்,
சலியாத மனமும், அன்பு அகலாத மனைவியும்,
    தவறாத சந்தானமும்,
தாழாத கீர்த்தியும், மாறாத வார்த்தையும்,
    தடைகள் வாராத கொடையும்,

தொலையாத நிதியமும், கோணாதகோலும், ஒரு
    துன்பம் இல்லாத வாழ்வும்,
துய்ய நின்பாதத்தில் அன்பும் உதவி, பெரிய
    தொண்டரொடு கூட்டு கண்டாய்—

அலை ஆழி அறிதுயில்கொள் மாயனது தங்கையே!
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகவாணி!
அருள் வாமி! அபிராமியே!

கலை ஞான தீபம்

புவனாம்பிகை கலைஞான தீபமென்று வழங்குவது 10 கட்டளைக் கலித்தொகைப் பாடலைக் கொண்டது. ஆசிரியர் கவிராச சுந்தரன் என்று தெரிகிறது. புவனாம்பிகையை உலகம்மை, உலகீன்றவள் என்று பாடுகின்றார். சுவையுடைய பாடல்கள்; நூல் முழுமையும் வாம மார்க்கம் எனப்படும் தந்திரமார்க்கச் செய்திகள் பொதிந்துள்ளன. இனிய தமிழில் இயன்றவை. பல இடங்களில் தேவியை அபிராம வல்லி என்றே வருணிக்கிறார். மிகப் பல தொடர்கள் அபிராமி அந்தாதித் தொடர்களாயுள்ளன. மந்திரம், சக்கரம், கலாந்தம் முதலான ஆறந்தம் முதலிய பொருள்கள் சொல்லப்பட்டுள்ளன. பின்வரும் பாடல் இதன் சுவைக்கு எடுத்துக் காட்டாகும்.

சார்வா ருனக்கு மனமே பிழைக்குந் தகைமை செய்யாய்
கூர்வாய சூலப் படையொன்று கொண்டுவெங் கூற்றுவந்து
நீர்வாரும் வாரு மெனவழைத் தாற்பின் னிணைப்ப தெங்கே
சேர்வா யடைக்கல மின்றே புவனை தன் சேவடிக்கே.

எனக்குந் தொழில்கொடுந் தீதான பாவ மியற்றிடுவ
துனக்குத் தொழிலது தீர்த்தென்னை யாள்வது றுங்குழலி
தனக்குத் தொழின்மணற் சோறளைத் தாடுதல் சங்கரியே
யனைக்குத் தொழினறு நீராட்டிப் போற்றி யருள் செய்வதே.

வெல்லரு மைம்புல வேழப் படையை விழவெறியும்
நல்லருள் வேற்படை பாச விருளுக்கு ஞானவெய்யோன்
செல்லருந் துன்பக் கடனீந்தி வீட்டின்பஞ் சேர்வதற்குச்
சொல்லருந் தெப்பம் அபிராம வல்லி துணைப்பதமே.

சவுந்தரி அந்தாதி

பலவகை விருத்தங்களாலும் சந்தப் பாக்களாலும் ஆன 100 பாட்டல் கொண்ட பிரபந்தம்; பவளக்கொடியடிகள் பாடியதாக அச்சிடப் பெற்றுள்ளது. அந்தாதியாக மண்டலித்து வருவது; பெரும்பான்மை எழுசீர், அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்கள்; சிறுபான்மை கொச்சகக் கலிப்பாவும் பதினுன்கு சீர் விருத்தம்வரையும் உள்ளன. இனிமையான சந்தம். பல பாடல்கள் திருப்புகழ் போன்ற சந்தக் குழிப்புக் கொண்டவை. மிகப் பல பாடல்களில் உமையென்று கூறி அம்மையைத் துதிக்கின்ருர்: தலச்சார்பின்றி சவுந்தரியென்று சில பாடல்களில் அம்பிகையைத் துதிக்கிருர். சம்பந்தர் வரலாறு இடையே குறிப்பிடப்பட்டுள்ளது. நூலுக்குக் காப்புச் செய்யுளோ சிறப்புப்பாயிரமோ பல சுருதிப்பாடலோ இல்லை. ஆசிரியர் பற்றி ஒன்றும் தெரியவில்லை. 51ஆம் பாடலில் 'பவளக் கொடியையும்' என்ற தொடர் பயில்கிறது.

இதன் பாடல்களுக்குப் பின்வருவது ஓர் எடுத்துக் காட்டாகும்.

வஞ்சமி லாத நெஞ்சகி யாயி
    மங்கல வாழி மதிசூடி
தஞ்சம தாகி விஞ்சிய ஞான
    தந்திர வாழ்வு பெறுவேனே
கஞ்சநி பாத குஞ்சித மேவு
    கண்களி கூர வருவாயோ
வஞ்சின பாவி யென்குறை தீரு
    மஞ்சுருவாகி யறிவாளே.

இதன் காலத்தை அறிவதற்கான எக்குறிப்புக்களும் நூலில் காணப்படவில்லை. 18 ஆம் நூற்ருண்டாயிருககலாமென்று தோன்றுகிறது.

திருக்குரக்குக்கா.

(மு. அ.)

இத்தலம் ஆனைக்கா, குரக்குக்கா, கோடிக்கா, கோலக்கா, நெல்லிக்கா என்ற பஞ்ச காக்களுள் ஒன்று. அப்பர்சுவாமிகள் பாடிய திருப்பதிகம் உடையது. காவிரி வடகரைத் தலங்களுள் இருபத்தெட்டாவது தலம்.

இடம்: வைத்தீசுவரன் கோயிலிலிருந்து மணல்மேடு செல்லும் பஸ் மார்க்கத்தில் மேற்கே நாலாவது மைலில் இளந்தோப்பிலிருந்து பிரிந்து வடக்கே செல்லும் கப்பிச் சாலையில் ஒன்றரை மைல். வழியில் வடவஞ்சார் என்ற ஊர்; இங்கு ஒரு பெருமாள் கோயிலும் ஒரு சிவன் கோயிலும் முழுமையும் இடிந்துள்ள நிலை; தென்புறம் கோயில் ஓரமாய்ப் பழவாறு ஓடுகிறது. இதுவே இன்று பாடல் கூறும் காவிரித் தீர்த்தம் போலும்.

பெயர்: குரங்கு பூசை செய்தமையால் குரக்குக்கா. சுவாமி பெயர் குந்தள நாதேசுவரர், அம்பிகை குந்தள நாயகி, தல விருட்சம் பலா, அனுமன் பூசை செய்த தலம்.

—தோற்றுமருள்

நாய்குரக்குக் காக்குந் தளநா யகியிடத்தே
ஏய்குந் தளக்கருணை ஈசனே. (29)

கோயில்: 14—6—70 இல் புதிதாய்க் கட்டிக் கும்பாபிஷேகம் நடந்தது. கிழக்குபார்த்த சந்நிதி, அக்கினி மூலையில் மடைப்பள்ளி, முன் மண்டபம், விசாலப் பிரகாரம், மதில்சுவர், பின் திருமாளிகைப் பத்தி, யாவும் புதியவை. பழைய கோயில் கருவறை மட்டும் இருந்தது. மிச்சம் எல்லாம் இடிந்திருந்தன.

மூர்த்தி: சுவாமி நடுத்தர உருவினர். அம்பிகை சிறிய திருவுரு. நிருதி விநாயகர், பின்புறம் ஆறுமுகர் மயில்மீது இடக்கால் மடித்து, அமர்ந்திருக்கிறார்; பக்கத்தில் தேவியர். தென்கோட்டம் தக்ஷிணாமூர்த்தி; வேறு மூர்த்தி வடிவங்கள் இல்லை. தல வரலாற்றை ஒட்டி அனுமார் உள்ளார்;

பெரிய பைரவரும் சூரியனும் உள்ளனர். உற்சவரில் சிறு நடராசர், அம்பிகை, மாணிக்கவாசகர், சந்தார், முருகன் தேவியரோடு, சந்திரசேகரர், அனுமார் உள்ளனர்.

பாடல்: அப்பர் சுவாமிகள் குறுந்தொகைப் பதிகம் ஒன்று. பாடல்தோறும், "குரக்குக்காத் தொழுவார்க்கு இடர் இல்லை" என்பதனை வற்புறுத்திப் பாடுகிறார்.

வரலாறு: இராவணனைக் கொன்ற பிரமகத்தி தோடம் நீங்க இராமன் பூசிக்க வேண்டிச் சிவலிங்கம் கொணருமாறு அனுமனை அனுப்ப, அனுமன் வரக் காலந் தாழ்த்தியமை கண்டு, இராமன் மணலால் இலிங்கம் செய்து வழிபட்டான். பின் வந்த அனுமான் வெகுண்டு அவ்விலிங்கத்தைத் தன் வாலினால் கட்டி இழுக்க, அது வரவில்லை. சோர்ந்த அனுமனை அவன் செய்த சிவ அபராதம் நீங்குமாறு சிவ பூசை செய்யும்படி இராமன் சொல்ல, அப்படியே அவனும் தன் பெயரால் குரக்குக்கா என்ற இத்தலம் ஸ்தாபித்துத் தீர்த்தமும் அமைத்து வழிபட்டான். இன்றும் குரங்குகள் வந்து பூசிக்கின்றன. குரங்கை யாரும் துன்புறுத்துவதில்லை. துன்புறுத்தினால், குரங்குகள் வந்து வாழை முதலிய பயிர்களை அழிக்கின்றன.

கொள்ளிட நதி நெடுங்காலத்துக்கு முன் இவ்வூரருகே ஓடிற்றுப் போலும். அதுபற்றியே அப்பர் "காவிரி வெள்ளம் பாய்ந்தெழுகின்றது" என்று 5 பாடல்களில் பாடியிருக்கிறார். 'குரக்கினம் குதி கொள்ளும் குரக்குக்கா' என்றும் பாடுகிறார்.

கல்வெட்டு: பழைய கோயில் முழுமையும் இடிந்து போனபடியால், எக்கல்வெட்டும் இல்லை.

நிர்வாகம்: குருக்களே பரம்பரைத் தருமகர்த்தா. சொல்ப சொத்தே உள்ளது. தேவகோட்டை பிச்சப்ப செட்டியார் குடும்பத்தார் தங்கள் கணக்கில் பல வருஷமாகக் குரக்குக்கா நந்தவனத் திருப்பணிக்கு என்று ஒதுக்கியிருந்த தொகையைப் பெருக்கி மூவாயிரம் ரூபா திருப்

பணிக்கும், கும்பாபிஷேகத்திற்கு ரூ. 1500-ம் கொடுத்தார்கள். நந்தவனம் வைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

ஏழாண்டுகளுக்கு முன் இத்தலத்தை யாம் தரிசனம் செய்யச் சென்றபோது, கோயிலில் கருவறை தவிர வேறு எதுவும் இல்லை. இருந்த கோயில் வரிசையில்—இருக்கின்ற கோயில் வரிசையில் அல்ல—சேர்க்க வேண்டியது இதுவும் ஒன்றுஎன்று அப்போது யாம் எண்ணினோம். ஆனால் இப்போதுஇக்கோயில்புதிதாகவே முழுத்திருப்பணியும்செய்யப் பெற்று அழகாகக் காட்சியளிக்கிறது. இறைவன் திருவருள் விளக்கத்தை யாரே அறிய வல்லார்? இக்கோயில் திருப்பணிக்கு முழுமூச்சாக உழைத்தவர்கள் இனங்தோப்பு சோமசுந்தரம் பிள்ளையும், அருகிலுள்ள திருப்புன்கூர் ஆலய நிர்வாக அதிகாரியாக இருந்த சுப்பையா பிள்ளையும் ஆவர். இத்திருப்பணி நன்கு நிறைவேறத் தருமபுரம் ஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளும் பேருதவி செய்துள்ளார். இவர்களுடைய பெரும்பணிக்குச் சைவ மக்கள் பெருநன்றி பாராட்டும் கடப்பாடு உடையர்.

நல்லபிள்ளை நானே.

[நெல்லை R. S. இராமலிங்கம்]

அறிந்தோ அறியாமலோ குற்றம் புரிவது மனித இயற்கை. "கொடுமை பல செய்தன நான் அறியேன்!" என்று திருவதிகை இறைவன் முன்னின்று திருநாவுக்கரசர் தெரிவிக்கின்றார். நம்மை அறியாமல் நடக்கும் சம்பவங்கள் பலவுள. வருமானந்தேடி வாழ்க்கையில் சுகம்பெற நினைத்து வியாபாரி ஒருவன் தன்னிடமுள்ள தனத்தைக் கொண்டு ஒரு தொழிலைச் செய்கிறான். ஆனால் அந்தத் தொழில் சரிவர நடப்பதில்லை. வியாபாரத்தில் வருமானமின்றிக் கைப்பொருளை இழந்து தவிக்கிறான். வாங்கிய கடனைக் கொடுக்க முடியாமல் திணறுகிறான். பாவம்! இது அறிந்து செய்யும் குற்றமா? அறியாமல் நேரும் சம்பவம் இது.

எதுவானாலும் எல்லாம் வல்ல இறைவன் முன்னின்று நமது குற்றங்குறைகளை முறையிட்டு வழிபடவேண்டும். அவ்விதம் வழிபட்டால் நம் மனத்தில் ஆண்டவன் நல்வித்தாகி நின்று நல்வாழ்க்கை என்னும் நற்பயிர் வளரத் திருவருள் புரிவான்.

உலகமெலாம் போற்றும் உத்தமராய் விளங்கிய அப்பர் பெருமான், ஆண்டவன் சந்நதியில் நின்று,

குலம் பொல்லேன்; குணம் பொல்லேன்;
குறியும் பொல்லேன்; குற்றமே பெரிதுடையேன்!
நலம்பொல்லேன்; நான் பொல்லேன்; ஞானியல்லேன்;
நல்லாரோ டிசைந்திலேன்; நடுவே நின்ற
விலங்கலேன்; விலங்கலா தொழிந் தேனல்லேன்;
வெறுப்பனவும் மிகப் பெரிதும் பேசவல்லேன்;
இலம் பொல்லேன்; இரப்பதே ஈயமாட்டேன்!
என் செய்வான் தோன்றினேன்! ஏழையேனே!

என்று தம்மைத்தாமே இகழ்ந்து கூறி இறைஞ்சுகின்றார். அருளாளர்கள் உலகமக்களின் நிலையைத் தம்மேல் வைத்து இவ்விதம் பாடுவது இயல்பாகும். அதனால் அவர்களைக் குற்றஞ் செய்பவர்கள் என்று நாம் எண்ணக் கூடாது. அருணகிரிநாதர் முற்பிறப்பில் செய்த வினையால் இப்பிறப்பில் தாம் துன்புறுவதாக உணர்ந்து "சட, கசட, மூட, மட்டி, பவ வினையிலே சனித்த தடியன் மிடியால் மயக்கம் உறுவேனோ?" என்று ஆறுமுகப் பெருமானிடம் முறையிடுகின்றார். அருட்பிரகாச வள்ளலாராகிய இராமலிங்க அடிகளும் அப்பர் பெருமானைப் போலவே அகில உலகங்களை யெல்லாம் படைத்துக் காக்கும் ஆண்டவனின் பெருமையையும் தம் சிறுமையையும் எண்ணியவராய்,

குலத்திடையுங் கொடியனொரு குடித்தனத்துங்
கொடியேன்! குறிகளிலும் கொடியனன்றிக்
குணங்களிலும் கொடியேன்!

என்று அருட்பாவில் பாடுகிறார். "நலத்திடை ஓர் அணுவளவும் நண்ணுகிலேன்; நிலத்திடைநான் ஏன் பிறந்தேன்! நின்கருத்தை யறியேன்!" என்று தியானிக்கிறார். இறை

வன் முன்னின்று யாவரும் தம் சிறுமையை நினைந்து குறைகளைச் சொல்லி வழிபடவேண்டும் என்னும் கருத்துடன் அருள்ஞானிகள் இவ்விதம் பல அரிய பாடல்களைப் பாடியுள்ளார்கள்.

ஆண்டவனின் பெருமையை நினைந்து தாழ்ந்து பணிந்து வணங்கும் அடியார்கள் அவன் திருவருள் துணையினால் அஞ்சாது நின்று வீர முழக்கஞ் செய்வதும் உண்டு.

"நாமார்க்கும் குடியல்லோம்; நமனையஞ்சோம்!" என்று சொன்னவரும் நாவுக்கரசர்தான்! பசியினால் வாடிய குழந்தை பேசாமல் உற்சாகமின்றி இருக்கிறது. கொஞ்சம் தாய்ப்பாலைக் குடித்ததும் துள்ளி விளையாடுகிறது. அதுபோலவே அவனது அருட்பால் பருகக் கிட்டிய அப்பர் பெருமானும் அருணகிரி நாதரும் "அந்தகா! வந்து பார்!" என்று ஆரவாரஞ் செய்கிறார்கள்.

இவ்விதமே அருட்பிரகாச வள்ளலாரும் எதற்கும் அஞ்சேன்! "என்று வீரம்பேசுகிறார்." அமைவறிந்திடா ஆணவப்பயலே! உன்னைச் சிவனருள் வாளால் வெட்டுவேன்; உண்மையிது கண்டாய்! "என்று சொல்லுவதோடு அமையாமல், தம் மனத்தை நோக்கி" மன மெனும் ஓர் பேய்க்குரங்கு மடப்பயலே! என்னையார் என்று நினைத்தாய்? ஞான சபைத் தலைவனுக்கு நல்ல பிள்ளை நான்! நீ எல்லோரையும் ஆட்டிவைக்கிறாய்; உன் அதிகாரம் என்னிடஞ் செல்லாது. திருவருள் துணையால் ஒருகணத்தில் உன்னை அடக்கிவிடுவேன். உன் நிலைகண்டு ஊர் சிரிக்கும். அங்கும் இங்கும் ஓடித்திரியும் குரங்குபோல் நீயும் அலைந்து கொண்டேயிருக்கிறாய். உண்பது நாழி; உடுப்பது நான்கு முழம், எண்பது கோடி நினைந்து எண்ணுவன! என்சொல்வழி நின்றால் நீ சுகமாய் வாழ்ந்திடலாம். மற்றவர்கள் போல் எனை நினைத்து மருட்டினால் உன் தலையில் அடிவிழும்!" என்று சொற்களை அடுக்குகிறார் வள்ளலார்.

"மனமெனும் ஓர்பேய்க்குரங்கு மடப்பயலே! நீதான்
மற்றவர்கள்போல் எனைநினைத்து மருட்டாதே கண்டாய்!
இனமுற என்சொல்வழியே இருத்தியெனில் சுகமாய்
இருந்திடுநீ; என்சொல்வழி யேற்றிலை யானாலோ

திணையளவுன் னதிகாரஞ் செல்லவொட்டேன் உலகஞ்
சிரிக்கவுனை யடக்கிடுவேன் திருவருளால் கணத்தே
நனவில் எனையறியாயோ? யாரென விங்கிருந்தாய்?
ஞானசபைத் தலைவனுக்கு நல்லபிள்ளை நானே!''

திருவருளால் கணத்தே அடக்கிவிடுவேன் என்று ''நான்'' எனும் தற்போதமின்றிக் கூறியுள்ளதை உற்று நோக்கி உணர்க. பாவம்! மனமாகிய குரங்கு பயந்து விட்டது! வள்ளலார் சொற்படி கேட்டு வேறொன்றையும் நாடாமல் ஒரு நிலையில் நின்றது. ''ஞானசபைத்தலைவனுக்கு நல்ல பிள்ளை நானே'' என்ற வார்த்தையைக் கேட்டதுமே அஞ்சி நடுங்கியது. இதுவரை துணையாய் இருந்த ஐவருக்கும் இதமான வார்த்தைகள் கூறித்தன்பால் ஐவரையும் இழுத்துக் கொண்டது. இப்பொழுது கண்கள் வேறொன்றையும் காணுவதில்லை. செவிகள் எதையும் கேட்பதில்லை. மூக்கு அவன் திருவடியில் அர்ச்சித்த மலரின் வாசனையையன்றி வேறு எதையும் முகருவதில்லை. வாய் அவன் புகழையன்றி வேறொன்றையும் பேசுவதில்லை. இவ்விதமே கைகள் மலர் தொடுக்கவும், கால்கள் கோவிலை வலம்வரவும் விரைந்தன. எனவே மனம் அடங்க எல்லாம் அடங்கி விட்டன. இந்நிலையில் மாறிய மனத்தைக் காண வள்ளலாருக்கு ஆனந்தம் பொங்கி எழுந்தது. ''ஞான சபைத் தலைவனுக்கு நான் நல்ல பிள்ளை, நீ எனக்கு நல்ல பிள்ளையாக மாறிவிட்டாய்'' என்று அன்பாய்ப் பேச ஆரம்பிக்கிறார்.

''ஏ! மனமே உனக்கு என்ன வேண்டுமோ கேள். மேலான உருத்திரன் வாழ்வை விரும்புகிறாயா? திருமால் பெறும் திவ்யமான வாழ்வை வேண்டுகிறாயா? அன்ன வாகனத்தில் செல்லும் நான்முகன் வாழ்வை நினைத்தாயா? அல்லது அமரர் உலகை ஆளும் இந்திரனைப்போல் ஆக வேண்டுமா? என்ன வேண்டினும் தடையில்லை; என்னோடு ஒற்றியூர் வரை கூடவா. அது எம்பிரான் இருக்கும் வளமான ஊர். வரையாது கொடுக்கும் வள்ளல் அங்கே எழுந்தருளி யிருக்கிறார். அவரிடம் எதுகேட்டாலும் தருவார். இன்றே வாங்கி உனக்கே தருகிறேன்.'' என்று அன்புலகந்த இன்னுரை கூறி அழைக்கிறார் வள்ளலார்

மன்று ருத்திரர் வாழ்வை வேண்டினையோ
மாலவன் பெறும் வாழ்வு வேண்டினையோ
அன்ன மூர்திபோ லாக வேண்டினையோ
அமையும் இந்திர னாக வேண்டினையோ
என்ன வேண்டினும் தடையிலை நெஞ்சே
இன்று வாங்கிநான் ஈகுவன் உனக்கே
வன்னி யஞ்சடை எம்பிரான் ஒற்றி
வளங்கொள் ஊரிடை வருதிஎன் னுடனே!

ஆம்! வள்ளலாரும் சமயசந்தர்ப்பவாதிதான்! "மனம் எனும் ஒரு பேய்க்குரங்கு மடப்பயலே!" என்று சினந்து பேசினார். அடுத்தாற்போல் ஆருயிர்த் தேவியை அழைப்பதுபோல் அருமையாக அழைத்து "ஏ நெஞ்சே! என்ன வேண்டினும் தடையிலை, இன்று வாங்கி ஈகுவன் உனக்கே; என்னுடன் ஒற்றியூருக்கு வா என்று மெல்ல அழைக்கிறார். காதலியைக் காதலன் அழைப்பதுபோல் இக்கவி அமைந்துள்ளது. இதன் நயங்களை அன்பர்கள் கண்டு இன்புறுவார்களாக.

இவ்விதம் மனத்தைத் தம்வசப்படுத்தும் வள்ளலார் இன்னொரு செய்யுளில்,

சிட்டமும் அடைந்தேன் சிற்சபை யுடையான்
செல்வமெய்ப் பிள்ளை என்று ஒரு பேர்
பட்டமுந் தரித்தேன்; எனக்கிது போதும்
பண்ணிய தவம் பலித்ததுவே!

என்று பெருமிதமாகவும் பேசுகிறார். நல்ல பிள்ளை என்ற பெயர் பெறுவதற்கு நீண்ட நாட்கள் தவம் செய்தார் என்பதை 'பண்ணிய தவம் பலித்ததுவே' என்பதால் அறிகிறோம். செல்வம் என்பது சிந்தையின் நிறைவே என்னும் சிறப்பு தோன்ற "எனக்கிது போதும்" என்று சொல்லுவது பொன்னேப்போல் போற்றத் தக்கது.

உலகிலே, நல்ல பிள்ளை என்று பெயர் பெறுவதற்கு நாட்கள் செல்லும்; கெட்டபிள்ளை என்று ஒரு கணத்தில் பெயர் எடுத்து விடலாம். இவ்விதம் பெற்றோர்கள் பிள்ளைகளுக்குப் புத்தி சொல்வார்கள். மண்ணால் ஒரு பொம்மையைச் செய்து முடிக்க சில நாட்கள் செல்லும்.

அதனை அழிப்பது என்றால் உடனே அழித்து விடலாம். தவறிக் கீழே போட்டால் தானே உடைந்துவிடும். தண்டவாளத்தில் ஓடும் துரித வண்டி சிறிது தப்பினாலும் உருண்டு சிதையும். அதுபோல மனிதனின் வாழ்வும் நிலை தவறினால் அழிந்து சிதையும்.

தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை

என்று வள்ளுவர் தெளிவாக விளக்குகிறார். எனவே நாம் செல்ல வேண்டிய வழியில் செல்லவேண்டும். வழி தவறினால் வாழ்வு சிதையும். விழுப்பந் தரும் ஒழுக்க நெறியில் நின்ற வள்ளலார், உயிர்கள் பால் இரக்கமும் அன்பும் உடையவர். கனவிலும் பிற வுயிர்களுக்குத் தீங்கு நினையாத பெருந்தகையாளர். அறியாச் சிறு பருவ முதலே அருட்பெருஞ்ஜோதி ஆண்டவனிடம் அளவிலா அன்பு செலுத்தி அல்லும் பகலும் அருட் கருணையை நினைந்து உருகி அமுதம் போன்ற அருட்பாக்களைப்பாடி வழிபட்டு இறைவனுக்கு ஆளாந்தன்மையைப் பெற்றார். அதனால் ஞான சபைத் தலைவனுக்கு நல்ல பிள்ளை நானே என்று அவர் கூறுவதில் வியப்பு ஒன்றுமில்லை. அவர் உயிரும் இரக்கமும் ஒன்றுதானாம்! இரண்டு இல்லையாம்.

உருவவென் னுயிர்தான் உயிரிரக் கந்தான்
ஒன்றதே இரண்டிலை; இரக்கம்
ஒருவில்என் உயிரும் ஒருவும்என் னுள்ளத்து
ஒருவனே நின்பதத் தாணை!

இரக்கம் ஒருவில் உயிரும் ஒருவுமாம்! என்ன கருணை! இவ்விதம் ஆணையிட்டுக் கூறும் வள்ளலாரை எம்மொழி கொண்டு போற்றிப் புகழ்வது? இரக்கமே வடிவாய் இராமலிங்க அடிகள் ஞான சபைத் தலைவனுக்கு நல்ல பிள்ளை என்று கூறுவதுபோல நாமும் ஞான சபைத்தலைவனுக்கு நல்ல பிள்ளையாக நடந்து நலம்பெற வேண்டும். அதற்கு வழி என்ன? நாள்தோறும் ஆலயத்திற்குச் சென்று நம் பிழைகளையெல்லாம் சொல்லி நம் பெருமானிடம் மன்னிப்புக்கோர வேண்டும். அன்றாடம் நமக்கு நேரும் குற்றங்களை யெல்லாம் சொல்லி, ஆண்டவனிடம்

பட்டினத்தார் அழுது தொழுது வேண்டும் அழகிய பாடலை நாமும் தினமும் பாடித் துதிக்க வேண்டும். அவ்வரிய பாடல் பின்வருமாறு :—

சொல்லால் வருங்குற்றம்! சிந்தனையால் வருந்தோடம்! செய்த
பொல்லாத தீவினை! பார்வையிற் பாவங்கள்! புண்ணிய நூல்
அல்லாத கேள்வியைக் கேட்டிடுந் தீங்குகள்! ஆயவும் மற்று
எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே!

உ

"ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே"

(மா. ப. தியாகராஜன் பி. ஏ.)

ஒரு பூனை நான்கு குட்டிகள் போட்டன. அவற்றுள் ஒன்று தாய்ப் பூனையால் கைவிடப்பட்டது. அதனால் ஆதரவின்றி அக்குட்டி அலைந்து பயந்து பதுங்கி வாழ்ந்து வந்தது. அதுசமயம் அதைக் கண்ணுற்ற ஒருவர் அக்குட்டிக்கு ஆதரவளிக்க எண்ணினர். சிறிது சிறிதாக அதன் பயத்தைத் தெளிவித்துத் தானிருந்த அறையில் அதைக் கொண்டு வந்து வளர்த்து வந்தார். அக்குட்டி பூச்சிகளைப் பிடித்துத் தின்ன ஆரம்பித்தது. அதுமுதல் அந்த அறையிலிருந்த பூச்சிகள் எங்குச் சென்றனவோ? படத்தின் பின்னல் பதுங்கிக் கிடந்த பாசைகளைக்கூட காண வில்லை. அதை ஒருநாள் யாரோ பிடித்துக்கொண்டு போய் விட்டார்கள். அது போன இரண்டு மூன்று நாள்களுக்குள் கரப்பான் பூச்சி, பாசைகள் ஏராளமாக உலாவ வந்துவிட்டன. பூனைக்குட்டி இருந்த காரணத்தினலேயே பூச்சிகள் அவ்வறையை விட்டகன்றன என இதனினின்றும் பெறப்படுகின்றது.

மற்றோரிடத்தில் தேள்கள் மலிந்திருந்தன. ஒரு நாளைக்கு இரண்டு மூன்று தேள்கள் அடிபடும். ஒருநாள் ஒருவர் அத்தேளொன்றினால் தீண்டப்படவே மிகவும் விஷக்கடியால் அவர் பாதிக்கப்பட்டார். உடனே ஒரு மூலிகை கொண்டுவரப்பட்டது. இரண்டுமூன்று இலைகளை அவர் மென்று சாப்பிட்டதும் அந்த விஷமிறங்கிக் குண மடைந்தார். அம் மூலிகை வேரோடு பறிக்கப்பட்டு வந்தமையால் அது ஒரு தொட்டியில் நட்டு வைக்கப்பட்டது. அதுவும் தழைத்து வளர்ந்தது. அதுமுதல் அங்கு ஒரு தேள்கூட காணப்படவில்லை. ஒரு மூலிகைக்கும் ஒரு பூனைக்குட்டிக்கும் தீயவை அகற்ற ஆற்றலிருப்பின், எல்லாம் வல்ல இறைவனுடைய சந்நிதியில் தீயவை அணுக இடமுண்டா? சூரியனைக் கண்ட பனிபோல் இறைவன் சந்நிதியைக் கண்டதும் துன்பம், கவலை, பிணி, மன நோய் ஆகிய இவைகள் அகல்வது எளிமையன்றோ?

எந்த எந்த இல்லத்தில் இறைவழிபாட்டிற்கென இடமமைத்துக் காலை மாலை பூசித்து வருகிறார்களோ அந்த அந்த இல்லங்களில் தீயவை தாமே அகலும். யாரொருவர் தமது ஸ்தூல தேகத்தில் ஆறு ஆதாரஸ்தானங்களில் ஐந்தெழுத்தை அமைத்துத் தியானிக்கின்றார்களோ அவர்களுடைய தேகம் ஆரோக்கிய நிலையிலிருப்பது திண்ணம். அதுவுமன்றி அறிவினாற்றல் மேம்பட மேம்பட தீய குணங்களும் அகலும். நல்ல எண் குணங்களும் அவரை வந்தடையும். இறைவழிபாட்டிற்கென அர்ப்பணித்த உடம்பை காமக்குரோத லோபாதிகளுக்கு இரையாக்குதல் கூடாது. அதேபோல் இறைவழிபாட்டிற்கென அமைத்துள்ள இடத்தில் வேறு விவகாரங்கள் நடத்துதல் கூடாது. சில வீடுகளில் நடுக் கூடத்தில் மாடம் அமைத்து அதில் பிள்ளையாரை வைத்து வழிபடுவார்கள். அங்கு அமைதியான நிலையமைவது கடினம். சிவசிந்தனை கிட்டுவதும் அருமையாகும். சிலர் படங்களை வரிசையாக மாட்டிப் பூச்சரங்களைத் தொங்கவிட்டு வழிபடுவார்கள். அந்த இடத்தும் சிவசாந்நித்தியம்

இருப்பது கடினமாகும். அமைதியும் நல்ல எண்ணமும் வரவேண்டுமென்றே "கோயிலில்லா வூரில் குடியிருக்க வேண்டா" மென்றனர். காரணம், தீய சூழ்நிலைகளால் மக்கள் பாதிக்கப்படாமலிருக்க வேண்டுமென்றே அவ்வாறு கூறியுள்ளார்கள். எங்கேயெல்லாம் கோயில்களில் ஆறு காலமும் தவறாமல் பூஜை நடத்தப்படுகின்றதோ அவ்வூர்களிலுள்ள மக்கள் ஆபத்து, விபத்துகளின்றி நல்லவண்ணம் அறவாழ்விலமைதியுடன் வாழ்வார்கள். அப்படியில்லாதிருப்பின் அது மக்கள் குறையேயாகும். அறுசுவையுடன் அட்டினிதிருப்பப் பசியுடன் ஒருவன் வருந்துவானுயின் அது அயினியின் குற்றமன்று. அந்தக் கோயிலை நல்ல வண்ணம் பாதுகாக்காது அங்கு சென்று தங்கள் தீய ஒழுக்கத்திலிழிவினுல் அங்குள்ள தூய்மையையும் அமைதியையும் கெடுப்பார்களேயானுல் அம்மக்கள் கோயிலின் நன்மைகளை எப்படிப் பெறமுடியும்? மக்கள் புறக்கணிப்பாலேயே பல கோயில்கள் பாழடைந்து போகின்றன.

இறைவன் சந்நிதியில் இருக்கிறேமென்றெண்ணுது கோயில்களில் வீண் வார்த்தைகளைப் பேசிக் காலங்கழிப்பதாலும், வூர் விவகாரங்கள், வீட்டு விவகாரங்களைத் தீர்த்துக்கொள்ளப் பயன்படுத்துவதாலும் என்ன பயன் ஏற்படும்? கோயில்களைச் சுற்றிக் கடைகளை அமைப்பதும் தவறேயாகும். பண்டைக் காலக் கோயில்களில் ஐந்தாறு பிரகாரங்களை அமைத்துக் கட்டியிருத்தல் வூர் சந்தடிகளால் மூலஸ்தானத்தில் பக்தி செய்யும் மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்பது கருதியேயாகும். பாடுபட்டுப் பண்டைய பெருமக்கள் கட்டிவைத்த கோயில்களைச் சரிவரப் பராமரிக்க வசதியில்லாமற் போனுலும் அவை தரும் நற்பயனுக்குக் குறுக்கிடாத மக்கள் நடந்து கொள்வது மிகவும் கண்டிக்கத் தக்கதாகும். சூதாடுவது, கள் குடிப்பது, வியபிசாரம் செய்வது போன்றவை மக்கள் பண்பாட்டைக் கெடுப்பன என்று அவைகளைத் தடுக்கச் சட்டங்கள் அமைத்துள்ளது போல கோயில்களில் அமைதியைக் குறைக்கக்கூடிய மக்கள் நடவடிக்கைகளைக் கண்டிக்கச் சட்டம் ஏற்படல் வேண்டும். கோயில்

களில் இன்னிசைக் கச்சேரிகள் வைப்பதும் தவறேயாகும். தேவமாதர்கள் கோயில்களில் நடனமாடுவது கூடாதென்று தடுத்த அதே காரணம் ஒட்டியே இசைக் கச்சேரிகளும் கோயில்களில் இடம்பெறலாகாது. தேனிருக்குமிடத்து வண்டுகள் தானே வருவது போன்று தூய வழிபாடு நடக்கு மிடத்து நன்மைகள் தாமே வரும். தீமைகள் தாமே அகலும். இறைவனிடத்து நாம் நன்மை பெற வேண்டு மென்று முறையிட வேண்டுவதேயில்லை. தங்கள் பொறுப்பை உணர்ந்து கோயில்களில் நடக்க வேண்டிய முறையில் மக்கள் நடந்து கொள்வார்களேயானுல் அதுவே நன்மையைத் தரும். கோயில்களில் செய்யத்தக்கவை யிவையவெனவும், செய்யத்தகாதவை இவையவெனவும் விதிக் கப்பட்டுள்ளன. அதன்வழி நடக்க இயலாதவர்கள் கோயில் களில் சென்று வழிபடாதிருப்பதே நன்று. அமைதி யின்மையும் அசுத்தமும் அமையப்பெற்ற கோயில்களிருப் பதைவிட இல்லாமலிருப்பது நன்று.

"ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே" என்று சிவஞானபோதம் பனிரெண்டாம் சூத்திரம் கூறும். ஜீவன் முத்தர்கள் வாசனுமலம் சாராதிருக்க ஆலயந் தொழுவார் கள் என்று கூறுவர். ஆலயந்தொழுவர் என்று மட்டும் கூறுமல் ஆலயந்தானும் அரனெனப் பாவித்துத் தொழப் படல் வேண்டும் என்று கூறியுள்ள சிறப்பும் கவனிக்கத் தக்கது. அரனிடத்து எவ்வளவு பயபக்தியுடன் தூய்மை யாக நடந்துகொள்ள வேண்டுமோ அவ்வளவு தூய்மையாகப் பக்தியுடன் ஆலயங்களில் நடந்து கொள்ள வேண்டும் என்ப தையும் இச்சூத்திரம் குறிப்பிடுகின்றது என்று உணர்தல் வேண்டும். அறங்காவலர்களும் அறநிலைப் பாதுகாப்பாளர் களும் ஆலயங்களைத் தூய்மையாகவும் அமைதியாகவும் வைத் துக் கொள்ள என்ன என்ன சட்ட திட்டங்களை வகுத்து ஆவன செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்ய வேண்டும். சமயப் பிரசாரங்களாலும் சட்டதிட்டங்களாலும் மக்களைச் சீர்திருத்த வேண்டுவது விழாக்களைச் செய்வதைவிட முக்கியமான காரியமாகும்.

உ

கருணையந்தாதி.

(வித்துவான். வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர்)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

வேதாந்த சார னருந்தே னுழுக விரிந்த கஞ்சப்
போதார்ந்த பச்சைப் பசுங்கொடி கும்பக பூரகத்தை
யேதார்ந் தலைநின் றிருமூன் றையுங்கடந் தேறினர்க்கு
நாதாந்த யோகந் தருங்கரு ணாலய நாயகியே. 39

நாயிற் கடைப்படு வேனைவின் ணுடர் நபந்து தொழுங்
கோயிற் புறத்திருத் தொண்டர் குழாத்தொடுங் கூடிப்பெற்ற
தாயிற்சிறந்த தபாலைவைத் தாட்கொண்ட தன்மையொரு
வாயிற் புகறற் கெளிதோ கருணை மகிமையையே. 40

மையைக் கயல்விழிக் கூட்டிய மாதர் மயக்கவெறும்
பொய்யைச் சிறிதும் பொருந்தாமற் புந்தியைப் போதவன்பின்
நெய்யிற் கருத்தில் விளக்கேற்றிக் கொண்டிந்த்ர நீலமிளிர்
மெய்யைக் குறித்திருப் பார்பெறு வார்பர வீட்டின்பமே. 41

வீட்டிப் பொறிகர ணுதியைக் காம வெகுளிமுதல்
வாட்டிப்ர பஞ்ச மயக்கங்கள் நீங்கி மனத்தையொன்றுய்க்
கூட்டி யசைவற் றிருந்தே கருணையங் கொம்பையுளம்
நாட்டிக் குறிப்பவர்க் காஞ்சிலம் பாலிக்கு நாதங்களே. 42

நாதங் கடந்த வொளிக்கொளி யாங்கரு ணும்பிகைபூம்
பாதங்கட் கன்பு பரியார்கள் சற்றும் பரிவிலரா
யோதங்கொ ணீர்வரைப் போங்குமிக் கோர்சொல்
லுரையிகழ்வார்
போதங்க ளில்லவ ராய்த்திரி வார்கொடும் புல்லரன்றே. 43

புல்லிலை நீரும் புனல்மேற் குமிழியும் புட்கரத்தின்
வில்லிடு வில்லு மெனத்தோன்றி வீழுமிம் மெய்யைநிலை
சொல்லிடும் பேதைத் துணிவை யொழித்துச் சுகநெறியிற்
செல்லிடும் புத்தி தருங்கரு ணும்பிகை சேவடியே. 44

சேவடி யெந்தன் சிரத்திலும் நான்சொலுஞ் செந்தமிழின்
பாவடி தோறும் பதித்துவைத் தாயென்ன பாக்கியமோ
மாவடி வேந்தும் பலிபால் நடந்தொரு வாமனமாய்
மூவடி வாங்கும் நெடியோன்பின் வந்தருள் மொய்குழலே. 45

குழலிசை யால்நிரை காத்தவ னுந்திருக் கோகனக
நிழலிசை வானுங் குறிக்குங் கருணை நிமலிசெம்பொற்
கழலிசை யாவென் கருத்தைத் திருத்திக் கடுநரகத்
தழலிசை யாமற் றடுத்தாள் கடைக்கட் டயவுவைத்தே. 46

வைத்தது மிங்கெனை வல்வினைக் கோவென் மனத்திருந்து
பொய்த்தது மென்ன புதுமைய தோநினைப் போரைமுன்னி
யுய்த்ததுஞ் சாதனை யோவறி யேன்சொலு முன்செவிக்குத்
தைத்தது மில்லைகொல் லோகரு ணாலயத் தற்பரையே. 47

தற்பரை யுன்னிரு தாட்டா மரைக்குச் சரண்புகுந்துஞ்
சொற்பரைப் போயிதஞ் சொல்லவைத் தாலென்ன சொல்வன்முக்கட்
சிற்பரை யேநற் சிவையே யிதுவுன் றிருச்செயலின்
கற்பனை யென்றிருந் தேன்றமி யேன்கரு ணாலயமே. 48

மேகத்தை வென்ற குழலணங் கேபண்டு விண்பறந்த
காகத்தின் வைத்த கருணையி லோர்புன் கடுகிலொரு
பாகத்தை யென்கண்வைத் தாற்குறை யோபசும் பொன்மைமிகும்
பூகத்தை வெல்லுந் தரக்கரு ணாலயப் பூங்கிளியே. 49

கிளியா யிருக்குமெய் யன்பருட் கூட்டிற் கிளர்ந்தசுடர்
ஒளியா யிருக்கும் முனிவர்க்கும் யோகியர்க் கோங்குபெரு
வெளியா யிருக்கு மனமிறந் தோர்க்குமெய் ஞானமெனும்
தெளியா யிருக்குங் கருணைப்பிராட்டி திருச்செயலே. 50

செயலொன்று நானறி யேனறி யாமையிற் சிக்கியிங்கு
மயலொன்றி நின்று வருந்துகின் றேனிம வான்பயந்த
கயலொன் றியகட் கரும்பே கவலை கடக்கமருந்
தயலொன் றிலாம லடைந்தே னுனைக்கை யடைபெனவே. 51

அடையும் பிறவி யலைகடற் சூழலி லாழ்ந்தலுத்துச்
சடையுமென் னுருயிர் மேற்கடைக் கண்ணருள் சற்றுவைப்பாய்
மடையுஞ் சிவகங்கை வாவியில் வந்தண்ட வாணர்தினங்
குடையுந்தென் காசிக் கருணா லயம்படர் கொற்றவையே, 52

கொற்றவை யேயென்றுங் கோமளை யேயென்றுங் குஞ்சரத்தைப்
பெற்றவ ளேயென்றும் பெண்ணணங் கேயென்றும் பேதையுயிர்க்
குற்றவ ளேயென்று மாமகி டாசுர னூழிவலி
செற்றவ ளேயென்றும் வாழ்த்துமெந் தாளுமென் சித்தமதே. 53

சித்தரும் மாதவச் செல்வரும் நான்மறை தேர்பரம
மூத்தரும் போத முனிவருஞ் செங்கை முகிழ்த்துமுடி
நித்தலுந் தாழும் நிமலிநின் பாதத்தில் நேசம்வைக்க
மத்தரு நீயுமல் லாலெனக் காருயிர்க் காதரவே. 54

தரவா வரமுந் தவமுமென் றேதினந் தாழ்ந்துருகிக்
கரவா துவந்தருள் நீபெற் றிடாமற் கனிந்தவரைப்
புரவாமல் நாளையெல் லாங்கழித் தாய்கொடும் புன்பிறப்பில்
வரவா வுனக்குக் குறிப்பின்னம் பேதை மடநெஞ்சமே. 55

நெஞ்சக் கரவும்பொல் லாமையும் பாவ நெறிகளுக்கு
மஞ்சிக் கொளாவடங் காமையும் புக்கொளி யம்மையுன்றுள்
தஞ்சித் திடாத்தடு கண்மையும் நீங்கத் தயவுவையா
துஞ்சித்த மேயிருந் தாலென்று நானினி யுய்வதுவே. 56

உய்தவத் தோர்திரு நாவினும் வேதத்தி னுச்சியினும்
மைதவி ரானந்த வைதிகச் செந்தமிழ் வாணரன்பிற்
செய்தநற் பாவினுந் திண்புனற் காமச் செருக்கனைத்துங்
கொய்தவர் நெஞ்சினு மாலய மாய்க்குடி கொண்டவளே. 57

கொண்டால நஞ்சமு தாக்கிய கேள்வன் கொடுத்த
கொன்றைத்
தண்டா ரணிசிவ சங்கரி யேயின்னந் தானுமென்னைத்
திண்டாரணியிற் செனிக்க விட்டாலுமுன் சேவடிக்குத்
தொண்டான தொண்டர்க்குத் தொண்டாய்ப்பணிசெய்யத்
தோற்றிவையே. 58

தோற்றுஞ் சுடரு மதியிய மானனுஞ் சூழ்ந்தெறியுங்
காற்றும் புனல்கனல் வானிலன் யாவுங் கலந்தெவரும்
போற்றும் பெருங்கரு ணாலயச் செல்வி புகழையென்றுஞ்
சாற்றுங் கருத்துடை யார்படை யாத தனமில்லையே. 59

இல்லாமை யிற்புல்லர் பாற்சென்று நிற்றலு மேழைமையுங்
கல்லாமை யுங்கடுந் துன்பமு நோயுங் கவலைமுத
லெல்லாந்தென் புக்கொளியெம்பெரு மாட்டி யெதிருருகி
நில்லா தவரையன் றேசென்மந் தோறும் நெருக்கிடுமே. 60

நெருக்கும் பொறியவித் தம்மையை நெஞ்சம் நினைத்திருந்தா
லுருக்குங் கருத்தை யுலைமெழு காக்கி யுடல்புளகங்
குருக்கும் பரவசங் கூட்டிடு மோடிக் குலாவுளத்தைச்
சுருக்கும் பெருக்கும் பரப்பிரும ஞான சுகானந்தமே. 61

ஆனந்த வாரண வாசிப் பெருங்கரு ணாலயமென்
லீனந் தவாமனத் தேபுகுந் தாளிதற் கீடினியோர்

தானந் தவமும் பிறிதிலைச் சஞ்சலஞ் சார்பிறவிக்
கானந்த னாலும் பயமில்லை யெந்தன் கருத்தினுக்கே. 62

கருத்திற் கருணை மணிவிளக் கைமனக் கட்டிரியிற்
பொருந்தித் திரோத விருள் நீக்க வுள்ளம் புறமசையா
திருத்தித் தியானித் திராப்பக லின்றி யிருந்தவர்க்கும்
பருத்திப் பொதிக்கன லிட்டது வாஞ்செய்த பாவங்களே. 63

பாவிக்கச் சிந்தனை தந்தாள் தனையென்றும் பாடத்தந்தாள்
நாவைக் கசிந்து நறுமலர் தூவித்தன் னற்பதத்தைச்
சேவிக்கப் பூசிக்கச் செங்கைதந் தாள்கல்விச்செல்வந்
தந்தாள்
ஆவிக் கினிய கருணைப் பிராட்டி யடியனுக்கே. 64

அடியே னலநின் னெதிர்நின் றிருகண்க ளானந்தநீர்
வடியே னகஞ்சற்று மாற்றறி யேனன்பர் வாய்மைகடைப்
பிடியேன் கருணைப் பெருவள்ள மேயிங்கு பேதலிக்குங்
கொடியேன் றனையுமென் றேவம்மை நீயருள்
கூட்டுவதே. 65

கூட்டமிட் டிமலர் தோறுஞ்செந் தேன்கொண்டு
கூட்டுதல்போற்
பாட்டி னமைப்பா லுறுநுண் பொருள்களும் பான்மையுமே
பூட்டிவைத் தாய்ந்த தமிழ்ப்பாவை யீவற்ற புல்லர்செவிக்
கூட்டவைத் தாய்புக் கொளியூர்க் கருணை யுமையவளே. 66

உமையாளை யன்பர்க் குயிரைநந் தாத வொளிவிளக்கை
இமையா சலமடப் பாவையை நான்கண் டிறைஞ்சவவ
ளமையாளிற் கொண்டத னாற்பிறப் பூடங் கெனைப்படைக்க
வமையா தினிமலர் மேல்வீற் றிருக்கு மயனுக்குமே. 67

அயத்தைப் புடமிட் டாடக மாக்குநி னன்மையருள்
நயத்தை யொருதினை யத்தனை பாவித்து ஞானசிவ
மயத்தை யடைந்துயிர் வாழச்செய் வாரண வாசிப்பிரான்
புயத்தை மருவு மயிலே கருணையம் பொற்கொடியே. 68

பொன்னே சடிலப் புராந்தகன் பாகம் பொலிந்திலங்கும்
மின்னே கருணை விளைவே புராதன வேதங்கட்கு
முன்னே புவன மிரண்ட கோடி முழுதும் பெற்ற
வன்னேயென் னாருயி ருன்னிரு தாளுக் கடைக்கலமே. 69

அடையார் பகையு முடிமன்னர் சீற்றமு மாணவத்தை
யுடையா ரியற்றிடுங் கோன்களு நாள்களு மூழ்வினையும்

விடையார்தென் புக்கொளி யார்வலப் பால்வளர் மின்னைவென்ற
இடையார் திருவருள் பெற்றிருப் போரைவந் தென்செயுமே. 70

செய்யவுன் பொன்னருள் மாரு தெனக்கருள் செந்தமிழா
லையயில் கேள்வி யருங்கவி மாலைய யாய்ந்தெடுத்துக்
கையணி செய்தும்பர் வேலந்த மந்தாரங் கமழ்ந்ததிருந்
துய்ய பசுங்கிளைத் தோளினுந் தாளினுஞ் சூடவுமே. 71

சூடகப் பங்கயச் செங்கையின் னேதமிழ்த் தோற்றமில்லா
மூடரைச் சேர முயக்கிவைத் தாலு முருந்துநகை
ஆடகப் பூங்கொடி யேயெந்தன் பத்தி யாதெனிலுன்
பாடகச் சீறடிப் போதையெக் காலமும் பன்னுவதே. 72

பன்னவொட் டாருட் பரியவொட் டாருள்ள பாவனையா
லுன்னவொட் டார்நின் றுருகவொட் டாரைவ ருன்னைத்தஞ்ச
மென்னவொட் டாரென்ன செய்வேன்வன் ருெண்டர்க் கெதிர் கொடுபோ
யன்னமிட் டாளு மணங்கே பெருங்கரு ணாலயமே. 73

ஆலயி லேறுங் கரும்பெனச் சிற்றிடை யார்மயலின்
மாலையுங் காலையு மாய்மெலிந் தேன்றுன்ப மாற்றுகண்டாய்
பாலையு ஞானப் பொருளையுஞ் சம்பந்தர் பாலளித்த
வேலையுஞ் சேலையும் வென்ற விலோசன மெல்லியலே. 74

மெல்லிய நூபுரப் பாதத்தை யுன்னி விம்மிவிம்மிப்
புல்லிய பாசம் பொடியாக்கி மெய்யன்பு பூண்டுதமிழ்ச்
சொல்லியென் கட்புன லாருய்ப் பெருகித் தொழக்கரும்பு
வல்லியை வென்றமின் னேயிதென் னெஞ்சுனை வேண்டுவதே. 75

வேண்டப் படும்பொருள் நீயறியா தல்ல விண்ணவருங்
காண்டற் கரிய கருணையின் னேயந்தக் காயமிங்கு
மாண்டற்கிருப்பினும் மாயப்பிர பஞ்ச வாரிதியைத்
தாண்டற் கிருப்பினும் நானறி யேன்மற்ருேர் தஞ்சமுமே. 76

தஞ்சத் துனதுபொற் ருளிணை யாற்தெய்வத் தாமரைக்கென்
னெஞ்சைக் கொடுவந்து பூட்டிப்பொன் மாய்கையில் நேசம்வைக்கும்
பஞ்சைப் புலன்களைப் பாராம லுன்பொருள் பார்த்திடவோர்
விஞ்சைக் குளிகை தருவாய் கருணை விளங்கிழையே. 77

விளங்கு மறைச்சிறு பாலனைச் சுந்தரர் வேண்டமுன்னாட்
குளங்கொள் கராவிடைத் தந்தபொன் னேயன்பு கூர்ந்தவர்தா
முளங்கொ ளுனதருட் பார்வைக்கு மீறின தோவென்மனக்
களங்க மதுகரு ணாம்பிகை யீதென்சொல் காரணமே. 78

காரண தாண்டவம் யாவையுங் காக்கக்கங் காநதிசூழ்
வாரண வாசியி லெண்ணான் கறமுன் வளர்த்தவன்ன
பூரணி நீயெனைப் பெற்றவ ளாகியும் புன்பிறப்பிற்
கோரணி நான்கொள்ள லாமோவி தென்னென்று
கூறுவதே. 79

கூறுஞ்சொ லெத்தனை யுப்படி ரேமனங் கூர்ந்துதினந்
தோறு நினைப்பது வுங்கப டேயிந்தத் தூலச்செய்கை
மீறு மகத்திய மேயாகில் நான்முத்தி வீடடையு
மாறெவ் விதம்புக் கொளிப்பெரு மான்புணர் வல்லவையே. 80

வல்லத்திண் பாரி விருப்பமென் ருலு மறலியொட்டான்
அல்லவென் ருங்கிருப் போமாகிற் செய்யு மயனுமொட்டான்
ஒல்லியி லுற்பவத் தூடே யுழலவென் ருல்முடிந்த
தல்லவம் மாதெட் சணக்காசி யம்பதி யம்பிகையே. 81

அம்பர மெங்கணும் போய்க்கரை கண்டறி யாதுவங்கத்
தும்பரின் மீட்டும்வந் துற்றபுட் போலவு மோரைம்புல
வெம்பரி யோடுள்ளத் தோர்பய மின்றியே மீளவும்வந்
தெம்பெரு மாட்டி யுனையடைந் தேன்சர ணென்றுன்னியே. 82

உன்னைத் துதிக்கவு முன்புகழ் பாடவு முன்னடியார்
தன்னைப் பணியவுந் தான்விதிக் காமலித் தாரணியிற்
பொன்னைப் புடவையை நச்சிப்புல் லோர்க்கிதம்
போய்ச்சொல்லவோ
வென்னைப் படைத்தது நீயவி நாசிக் கிறையவளே. 83

இறைப்பொழு தேனு மவிநாசி லிங்க ரிடத்தகலா
மறைப்பொரு ளான கருணை யயர்ந்தை மனத்திலுன் ஞர்க்
கறப்பெருந் துன்ப மிடியாற் பசியினெ ஞந் தப்பர்மனைப்
புறக்கடை தோறும் பலிக்குழல் வாரிந்தப் பூதலத்தே. 84

பூவியை நான்முக னூழ்வினை நோக்கிப் புரிந்துவிட்ட
வாவியை நான்சுமந் தாசையைப் பற்றி யடர்ந்தகொம்பிற்
ருவிய புன்குரங் கானே னெனையம்மை தாங்கிடினும்
பாவியென் றேதள்ளி ஞலுமுன் சித்தமென் பாக்கியமே. 85

பாக்கியஞ் செய்தன மேமன மேயருட் பாமதுரந்
தேக்கி யருந்தவர் செந்தமிழ்ப் பாடற் றிருச்செவிக்கண்
ஆக்கி யவர்க்கரு ளுங்கரு ணாம்பிகை யம்மைநல்ல
வாக்கிய மாக்கிறம் புன்றமிழ் மாலை வனைந்திடவே. 86

வனைந்திடு மேகலை யுங்குழைத் தோடும் மணிச்சிலம்பும்
புனைந்திடுஞ் சிற்றடிப் பொற்று மரையுமெப் போதுமுள்ளம்
நினைந்துடன் முற்றும் புளகமுற் றுணர்ந்த நீடிக்கண்ணீர்
நனைந்திட நான்றொழச் செய்வாய்தென் புக்கொளி
நாயகியே. 87

நாயைத் திருந்து மடவார்சிற் றின்ப நசைபிடித்த
பேயைப் பிடித்து மயலொழித் தாண்ட பெருங்கருணைத்
தாயை யுயிர்க்குத் தனித்துணை யைத்தரிப் பாகமன
மேயப் பணிமின்கண் டீர்பர வீட்டின்ப மெய்துதற்கே. 88

எய்தற் கரியதோர் மானிட தேக மெடுத்துமின்ன
முய்தற் குறுதி யுளத்திலை யேன்பின்னு முற்றுளத்திற்
செய்தற் கிடஞ்செய்த னல்லாமல் வேறெவன் றீவினையே
நெய்தற் கருங்கட் டிருவவி நாசி நிருமலையே. 89

மலைப்பா நமக்கு மனத்துறை யாள்மற வாவுறுதி
நிலைப்பார் மனத்தில் நிலைபெற்று வாழ்வள்தம் நெஞ்சகத்தை
உலைப்பான் மெழுகி னுருக்கிடு வான்கரு வுற்பவத்தைத்
தொலைப்பாள் பெருங்கரு ணாலய வானந்த சுந்தரியே. 90

தரிக்குந் தியான மனதுண்டு தாகந் தவிரமெய்த்தேன்
விரிக்குநின் சேவடிப் பங்கே ருகமுண்டு வீற்றிருப்பத்
தெரிக்கு முணர்வை யளித்துத் திரோபவத் தீர்த்தருள்வாய்
அரிக்கு மயனுக்கு மெட்டார் வலப்பங் கமர்ந்தவளே. 91

அமரணி தானவர் திண்புயஞ் செம்புன லாறுபடச்
சமரிடு வேற்கைக் கடம்பணி வான்புயச் சண்முகப்பேர்க்
குமரனை யீன்ற கருணை லயவல்லி கோதிலன்பர்
தமருட னென்னையுங் கூட்டிவைத் தாள்சஞ் சலமறவே. 92

சஞ்சலம் போக மிடிபோக நெஞ்சகந் தன்னிலுள்ள
வஞ்சகம் போக மறம்போக மெத்த மயல்செய்புல
னஞ்சகம் போகப் பணிமின்கண் டீர்கரு ணாலயப்பெண்
செஞ்சிலம் பாலிக்குஞ் சேவடி யைத்தினஞ் சென்றடுத்தே. 93

(தொடரும்)

நம் சமாஜ உறுப்பினர் சித்தாந்தக்காவலர் நாகர் கோவில் சிவத்திரு. C. வள்ளிநாயகம் பிள்ளை பி. எ., பி. எல். அவர்கள் அறுபாண்டு நிறைவு மணி விழா 13—9—70 ஞாயிறன்று அவர்கள் இல்லத்தில் மிகச் சிறப்புற நிகழ்ந்தது. மணிவிழாக் கொண்ட பேரறிஞர் அவர்கள் சமாஜத்தோடு, நீண்டகாலமாய்த் தொடர்பு கொண்டுள்ளவர்கள். அங்குள்ள நன்னெறி மன்றத் தலைமை நிலையை யேற்று ஒல்லும் வகையான் சமயத்தொண்டு ஆற்றி வருகின்றார்கள். அவர்கள் இன்னும் சிறக்க வாழ்ந்து நல்லறப் பணிகளையாற்ற எல்லாம் வல்ல பெம்மான் அருள் சுரக்க அவனிணையடிகளையே வேண்டி வழுத்துகின்றோம்.

புன்செய்ப் புளியம்பட்டி அருள்நெறி மன்றத்தின் சார்பில் 23—9—70 இரவு அங்குள்ள திருமுருகன் திருக்கோயிலில் திருக்குடந்தை பண்ணாராய்ச்சி வித்தகர் திரு. ப. சுந்தரேசனார் அவர்கள் 'திருமுருகாற்றுப்படை' என்னும் பொருள்பற்றி இசைச் சொற்பொழிவாற்றினார்கள்.

8—9—1970 திங்கட்கிழமை மாலை 5 முதல் 9 வரை அருணந்தி சிவாசாரியார் குருபூசைவிழா, நாகர் கோவில் நன்னெறி மன்றத்தாரால் கோட்டாறு மாரிமுத்துப்பண்டாரம் அவர்கள் இல்லத்தில் வைத்து நடத்தப்பெற்றது. மன்றத்தலைவர் திரு. சி. வள்ளிநாயகம் பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினர். சைவப் புலவர்கள், திருவாளர். சி. குமரேசபிள்ளை, பகவதிப்பெருமாள் பிள்ளை, அழகப்ப பிள்ளை ஆகிய பேரறிஞர்கள் நன்மொழி வழங்கினர். அருச்சனை, தியானம், பஜனை, தீபாராதனை, பிரசாதம் வழங்கல் ஆகியவைகளுடன் விழா இனிது முடிந்தது.

காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகச் சார்பில் காஞ்சிச் சிவதல வார வழிபாடு 6—9—70, 19—9—70 ஆம் நாள்களிலும் கழக 36 ஆம் ஆண்டு விழா 4—10—70ல் திருவேகம்பத்தில் அருள் திரு சங்கராச்சாரியார் புதுப்பெரியவாள் சந்நிதியில் பலர் விரிவுரையுடனும் காஞ்சித்திருநகர் வலம் 11—10—70 லும் சிறப்புற நிகழ்ந்தன.

தைப்பிங் திரு. மு. வி. முத்துஇராமலிங்கம் பிள்ளையவர்கள் தம் அறுபானுண்டு மணிவிழாவின்போது வெளியிட்ட சிவபுராணம், திருவெம்பாவைப் பிரதிகள் வரப்பெற்றோம். அவர்களுக்கு சமாஜத்தின் நன்றியும் வாழ்த்தும் உரியதாகுக. அவர்கள் இன்னுமொரு நூற்றாண்டிருந்து இந்நிலத்து நம் சமயத் தொண்டுகளிலீடுபட எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிப்பானாக. சிவபுராணம் பிரதிவேண்டுவோர் சமாஜச் செயலாளருக்கு 100 பிரதிகளுக்கு ரூ 1/-தபாற்செலவுக்கு ஸ்டாம்பாக அனுப்பினால் பிரதிகள் இலவசமாகத் தபாலில் அனுப்பப்பெறும். வேண்டுவோர் தங்கள் சபையின் அத்தாட்சியுடன் சமாஜச் செயலாளருக்கு எழுதிப் பெற்றுப் பலருக்கும் கொடுத்து மனனம் பண்ணச்செய்து சமயம் தழைக்க உதவுவார்களாக.

ஐப்பசித்திங்கள் சிறப்பு நாள்கள்

5 (22-10-70) பூசம்-சத்திநாயனார் விழா

12 (29-10-70) —— தீபாவளி விழா

13 (30-10-70) சுவாதி-மெய்கண்டதேவநாயனார் விழா

15 (1-11-70) அனுடம்-பூசலார் நாயனார் விழா

17 (3-11-70) மூலம்-ஐயடிகள் காடவர்கோன் நாயனார் விழா

18 (4-11-70) —— கந்தர்சட்டி விழா

26 (12-11-70) அசுவனி-திருமூல நாயனார் விழா

27 (13-11-70) பரணி-நின்றசீர் நெடுமாற நாயனார் விழா

28 (14-11-70) கார்த்திகை-இடங்கழி நாயனார் விழா.

Printed at the Sengunthamithran Press, 33, Armenian Street, Madras by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.